உ

கடவுள்துணை.

விச்சித்திர

# ஜெகஜாலக்கண்ணாடி.

பத்தாம்பாகம்.

இவை ௰-பாகம் வரையில் அச்சிட்டப்பட்டு ஒரே கட்டடமாகவும் பயிண்டு செய்திருக்கிறது.



இவை-செஞ்சி

வசோம்பாமுதலியாராலியற்றப்பட்டது

திருப்பதி

இரத்தினமுதலியாரவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

உ

கடவுள்துணை

# விசித்திரஜெகஜாலக்கண்ணாடி.

காப்பு - விருத்தம்,

சத்திசிவமாலுடைய சகாயத்தாலும்
சண்முககணபதியின் தீரத்தாலும்
உத்தமமறைபிரம்ம னுதவியாலும்
உலகத்திற்சரஸ்வதியாள் கிருபையாலும்
சித்தர்பதினெண்பேர்கள் செயலினாலும்
ஜெகஜாலமதை சொன்னேன்யானும்
இத்தரையிலுள்ளகன வான்களேநீர்
என்னபிழையிருந்தாலும் ஏற்கவேணும்

எலுமிச்சம்பழத்தை துணியிற்கட்டி துணியறுபடாமல் வெட்டும் ஜாலம்;

குட்டையிலேயெலுமிச்சம் பழத்தைக்கட்டி
கூசாமல்வெட்டுகிற குறிப்பைக்கேளு
நாட்டமுடன்துணிநடுவில் பழத்தைவைத்து
நம்பியேதளர்த்தியதாய் கட்டிநீதான்
கூட்டப்பாமணல்குவித்து அதின்மேல்வைத்து
குறிப்பாககத்திகொண்டு வெட்டினக்கால்
பொட்டெனவேபழம்ரெண்டு துண்டாய்ப்போகும்
புண்ணியனே துணியறா திருக்குஞ்சொன்னேன்

(வ-ம்) ஒருஎலுமிச்சம்பழத்தைகொண்டுவந்து நாலுமுழமேல சவுக்கமுள்ள கைக்குட்டையில் நடுவேவைத்து தளர்த்தியதாய் பக்குவமாய்க்கட்டி பூமியின்மேல் மண்குவித்து அதிகட்டினபழத்தை வை[த்து] மந்திரம் சொல்பவர்போல் ஓங்காளி ஹ்ரீங்காளி ரீங்காளி மாங்காளியென்றுசொல்லி கனத்த கத்தியைக்கொண்டு வெட்டினால் பழம் ரெண்டுதுண்டாகிவிடும் துணியறாது லகாதந்திரமாக வெட்டவேண்டியது மணல்அடியில் யிருக்கவேணும், 130

களைத்தசாம்பல் யெடுக்குஞ்ஜாலம்.

அஞ்சாமல்ஜலநடுவே சல்லடைதனைத்து
அப்பனேசாயபாத்தில் களைத்துவிட்டு

அஞ்சவில்லாமகைபோட்டுயெடுப்பேனென்று
அனைவருக்குஞ்சொல்லிவிட்டு அப்பாகேளு
கொஞ்சமது நெரிஞ்சிவிரை தூளாய்செய்து
கொற்றவனேபோட்டுநீ வழித்தையானால்
வஞ்சமில்லைகரைந்தசாம்பல்வந்தேபோச்சு
வளமாகசெய்திதனை பரிட்சைபாரே.

(வ-ம்) சாம்பலைக்கொஞ்சந் தண்ணீரில்கரைத்துவிட்டுஇந்தகரைந்தசாம்பலை எடுக்கிறேன்யென்றுசொல்லி கொஞ்சம் நெரிஞ்சிவிரையை விபூதிபோல் தூளாய்செய்து கொஞ்சம்போட்டுகலக்கிகைபோட்டுவழித்தால் வந்துவிடும் மறுபடியுங் கரைத்துவிட்டாலுங் கரைந்துவிடும்மகா சோக்கானவித்தைசெய்தானென்று ஆச்சரியப்படுவார்,

## நெருப்புமிதிக்கும் வித்தை.

கூறுகிறேன்கொத்தானும் சமூலத்தோடே
கொள்ளப்பா மருக்காரை பூவுங்கொஞ்சம்
சேரப்பா தாளிச்சமூலம்உப்பு
செப்பியயிவைநான்கும் ஒன்றாய்சேர்த்து
பாரப்பா பசும்பாலில் அரைத்துநீதான்
பாலகனே உள்ளங்காலில் பூசிக்கொண்டு
நேராகநெருப்புதனை மிதிக்கலாகும்
நிந்தையில்லைகால்வேகா திருக்குஞ்சொன்னேன்,

(வ-ம்) தாளிச்சமூலம் கொத்தான்சமூலமுடனேயும் மருக்காரை உப்பு இவைகளைபசும்பாலில் அரைத்துஉள்ளங்காலில் பூசிக்கொண்டு தீஅடங்கினபின் கட்டைநெருப்பைபரப்பி அதின்மீதுசாதாரணமாய் மிதிக்கலாம் பார்ப்பவர்கள் அக்கினிபந்தனம் செய்தானென்று ஆச்சரியப்படுவார்கள். 132

## தீபத்தைஏற்றிப்பார்த்தால் வீடெங்கும்மஞ்சள்நிறமாகும்

சீருகயின்னமொரு வித்தைகேளு
செப்புகிறேன்அனைவருக்கும் வெளியாய்த்தானே
சாறுயந்தனைவாங்கிகொதிக்கவைத்து
சட்டமுடன்வெதவென் றிருக்கும்போது
நேருகவுப்புபவுடர்கொஞ்சம்போட்டு
நிட்சயமாய்கொளுத்தியதை பார்த்தையானால்
மாரியேமஞ்சள்நிற மாகும்பாரு
மனிதர்முகம்வெவ்வேறாயிருக்குஞ்சொன்னேன்,

(வ-ம்) சாருபத்தை கொதிக்கவைத்து வெதவென்றிருக்கும் போ துஉப்புபவுடர்கொஞ்சமபோட்டுகொளுத்தினல்விடெக்குப்பஞ்சன ிரமாக தோத்தரிக்கும் அக்காலத்தில் ஒருவர்முகம் ஒருவர்பார்த் தால் வேஷருபமாக தோணும். 133

வெள்ளா வேகாதிருக்குஞ்ஜாலம்,

கண்மணியேயொருவர் துகில் ஒருவர்க்கீத்து
காசிவாங்கும்வண்ணாரின் கதையைக்கேளு
ஒன்றுமில்லை ஆவாரன்விறகைவெட்டி
உத்தமனேகொளுத்தியதைசொல்லக்கேளு
வண்ணமுடனெருமாட்டின்மூத்திரத்தால்
வார்த்துமேஅவித்துகரியெடுத்துநீயும்
வெண்ணமுடன்வெள்ளாவைப்பில் போட்டுவிட்டால்
தீயெரியும்வெள்ளாயது வேகாதப்பா.

(வ-ம்) ஆவாரன்விறகைவெட்டி அக்கினிமூட்டி கொளுத்தி எருமை மூத்திரத்தால்அவித்து அந்தகரியை வெள்ளாயடுப்பில் போட்டுவிட் டால் எவ்வளவுகட்டைபோட்டுக் கொளுத்தியும் வெள்ளா வேகாது அதைபவித்து அதினுள்ளிருக்கும் சாம்பலெல்லா மெடுத்துவிட்டும றுபடியுங்கொளுத்தினல் வேகும். 134

நாய்கடிக்காதிருக்குஞ்ஜாலம்,

கேளப்பாநாய்கடிக்காதிருக்கும்வித்தை
கண்மணியேசொல்லுகிறேன் கருத்தைநாட்டு
கேளப்பாயெருக்கதிலே யெருக்கன்பொக்கு
கூட்டப்பாநாயுருவியிலையுங்கூட
கேளப்பாஇம்மூன்றுங் கசக்கிநீதான்
கடிக்கவருநாய்முகத்தில் யெறிந்தையானால்
கேளப்பாமுகந்தவுடன் மழுக்கங்கொள்ளும்
கட்டிவிட்டார்வாயையென்று கதறுவாரே,

(வ-ம்) நாயுருவியிலையும்எருக்கன்யிலையும் எருக்கன்பொக்கும் இம் மூன்றும்நசுக்கி கடிக்கவரும் நாய்முகத்தில்எறிந்தால் அதை முகந்த வுடன் மயக்கங்கொண்டு திகைத்துநிற்கும் கண்டவர்கள் எவனோவா ய்கட்டிவிட்டானென்று சொல்லுவார்கள். 135

செருப்பில்லாமல் வெண்ணையுருக்குஞ்ஜாலம்,

மந்திரத்தைஒருபோதும் பழிக்கவில்லை
இல[illegible]சுரர்களையிகழவில்லை

தந்திரமாயின்னமொருஜாலங்கேளு
　　தம்பியடே வெண்ணெயதுருக்கும்வித்தை
சொந்தமாய்சுண்ணாம்பை புதைத்துவிட்டு
　　சூட்சமாய்வெண்ணெயதை யுருக்கலாமே
இந்தைதநிழ்யே காம்பரம்செய்தஜாலம்
　　ஜெகமீதில் அநேகருக்குஞ் சொல்லச்சொன்னார்

(வ-ம்) கல்சுண்ணாம்பில் பெருங்கட்டியாக நாலைந்துகொண்டுவந்துஜாலம்ஆடுமிடத்தில் துணிமறைவுசெய்து முன்னதாய் பூமியில்புதைத்துவிட்டு ஒருகின்னத்தில் வெண்ணெயைக்கொண்டுவரச்சொல்லி அதனைமேலேவைத்து பக்கவதி வெண்ணெயுருக்கவேணுமென்றுசற்றிதும்ஜலம்விட்டால் வெண்ணெயுருகிவிடும் இந்தவிசித்திரஜாலம் யாவரும்பார்த்து ஆனந்தமடைவார்கள். 136

குளத்தில்முழ்கிநாமமிடுஞ்ஜாலம்.

மண்ணுலகிலுள்ளவர்கள்கண்டுகொள்ள
　　மதியினால்சொல்லுகிற வித்தைகேளு
கண்மணியேகொடிக்கள்ளிப் பாலைநீதான்
　　கருத்துடனேநாமம்போல் யிட்டுக்கொண்டு
வண்ணமுடன்பிரம்மதண்டிப் பாலைநீதான்
　　வைத்துக்கொள்திருமணம்போல்நெத்திதன்னில்
புண்ணியனேயுலர்ந்தபின்பு தெரியாதப்பா
　　பொய்கையிலேமுழ்கியே வந்தாயானால்
தண்மையுடன்கண்டவர்கள் யுன்னையப்பா
　　தருமருக்குதாதுசென்ற மாலென்பாரே,

(வ-ம்) கொடிக்கள்ளிபாலைக்கொண்டுவந்துதிரேகபாதியந்தமும்நாமம்யிட்டுக்கொண்டு திருச்சூரணத்திற்குபதில் பிர்மதண்டிப்பாலை யிட்டுக்கொண்டு காய்ந்தபிறகு ஒன்றும் தெரியாமலிருக்குஞ்சபைபேரைப்பார்த்து குளத்திலாவது இனத்திலாவது நாமம்யிட்டுக்கொண்டுவருகிறேனென்று சொல்லிவிட்டு குளத்தில்முழ்கிவந்தால் திரேகபாதியந்தமும் நாமம்பிரகாசிக்கும் சபையில்ஒரு சொம்புஜலம் ஊத்திக்கொண்டாலும் கொள்ளலாம். 137

நூலைக்கொளுத்தி சேதமில்லாமல் எடுக்குஞ்ஜாலம்,

கண்டுகொள்வீர்உண்டை நூல்கொண்டுவந்து
　　களிப்புடனேகஞ்சிதண்ணீர்உப்புஞ்சேர்த்து
மண்டலத்தில்உனை மதிக்கநூலில்பூசி
　　மகிழ்ச்சியுடன் உலரவைத்துகாய்ந்தபின்பு

விண்டுகிறேன் விளக்கெண்ணெய்மேலே பூசி
வளமாககொளுத்திவிட யெரியுமப்பா
சண்டனிட அக்கினியை தடுத்தநூலை
சபைதனிலேகாட்ட மனமகிழுவார்கள்:

(வ-ம்) கஞ்சிதண்ணியும் உப்புங்கரைத்து உண்டைநூலில்பூசிஉலரவைத்து காய்ந்தபிறகு அதின்மேல்விளக்கெண்ணெய் பூசிக்கொளுத்தினால் எரியும்நூல்சேதமாகாது அவிந்தபின்பு நூலையெடுத்து அனைவருக்குங் காட்டலாம். 138

அக்கினிசட்டியேந்தும்ஜாலம்,

வாங்கப்பாபுதிதான சட்டிவாங்கி
வளமாகஅக்கினியையதிலேகொட்டி
தாங்கவேராவ்பகலாய்கட்டைமூட்டி
தம்பியடேகொளித்தியது தணிந்தபின்பு
நீங்காமல்சாம்பலெல்லாமதிலேதாக்கி
நிறையவேயெடுத்துபின்னும் சொல்லக்கேளு
பொங்கமாய்தீமூட்டி கொளித்திக்கொண்டு
பூலோகமாச்சரிக்கையிலேந்து

(வ-ம்) ஒருபுதியசட்டிகொண்டுவந்து அந்தசட்டியில்நெருப்புகொட்டி கட்டைபோட்டுகொளுத்தி அந்தகட்டைசாம்பல் அந்தசட்டிநிறையும்படியாககொளுத்தி ரெண்டுநாள் சென்றபின்பு ஆறவைத்து அதிலிருக்கும்சாம்பலை அந்தசட்டியில் முக்கால்சட்டி யிருக்கும்படி அழுத்திஅதற்குமேல் வெளியில்புறப்படவேண்டுமானால் அந்தசாம்பலின்மேல் கொஞ்சம் கட்டைபோட்டுகொளுத்தி கூச்சமில்லாமல் வெளியில் தூக்கிக்கொண்டுவரலாம் கண்டவர்கள் இந்தவுளவு தெரியாமல் அக்கினிகட்டுகட்டினானென்று ஆச்சரியப்படுவார்கள். 139

துட்டுநடக்குஞ்ஜாலம்,

துட்டதனை ஒருமுழம் துலவில்வைத்து
துள்ளியது அருகில்வரும்வித்தைகேளு
நாட்டமுடன்தலைமயிரில்முடிதான்போட்டு
நம்பியேயதன்முனையில்மொழுக்கைநாட்டு
வாட்டமாய்ஒருவரிடம்துட்டுவாங்கி
வளமாகஅதில்ஒட்டி யெதிரில்வைத்து
சட்டென்றுவாடியென்றுவிபூதிபோட்டு
சடுக்கென்றேகாலதனைச் சட்காமாட்டு

(வ-ம்) மனிதர் தலைமயிரில் ஒண்ணரைமுழமெடுத்து அதின்முனையில் கொஞ்சம் மெழுக்குருண்டைவைத்திருந்து ஜாலம் ஆடும்போது ஒருவரிடத்தில் தம்பிடியாகிலும் காசுதுவாகிலும் வாங்கி மந்திரஞ்செய்பவர்போல் ஷை மயிர்மெழுக்கில் இந்தத்துட்டை ஒட்டி எதிரில் வைத்து இன்னொருமுனையை காற்பெரியவிரலில் கட்டியிருந்து இந்த துட்டை நடக்கவைக்கிறேனென்று கொஞ்சம் விபூதியைப்போட்டு சல்பகவதி காளி-வாடியென்று தந்திரமாக காலைசட்டென்ற ஜட்சாதட்டிறால் துட்டுதுள்ளி வந்து விழுந்துவிடும் கண்டவர்களெல்லாம் வசியமென்று ஆச்சரியப்படுவார்கள்மகாபிரட்டாய்செய்யவும். 140

### மரஅன்னம்தண்ணியில்போயும் ஜாலம்.

மன்னவனேயின்னமொருவித்தைகேளு
மரத்தினால் அன்னமொன்றுசெய்துநீதான்
சொன்னபடிஅன்னத்தின்நெத்தியேதான
ஊசிமுட்டன்யிரும்பாணிபதியவைத்து
வுன்னிதமாய்மாத்திரைமேசையொன்றுசெய்து
உத்தமனேகாந்தமதின்முனையில்தாக்கி
அன்னமதைஜலம் தனில்விட்டிடும்
அப்பனேமாத்திரைகோலைகையிலேந்தி
தன்மையுடன்கோல்காட்டிஅழைக்கையாலே
தாணிலுள்ளோர்ஆச்சரிக்கப்பேயும்பாமே.

(வ-ம்) மரத்தினால்அன்னமொன்றுசெய்து அதின்நெற்றியில் இரும்பு ஆணி அடித்துவைத்திருந்து ஒருமுனைக்கல்கொம்பின்முனையில்காந்தம்பதியவைத்திருந்து ஜாலமாடும்போது ஒருமரதொட்டியில் ஜலம்விட்டு ஷை அன்னத்தைத் அதில்விட்டுமந்திரகோலைகையிலெடுத்துகாந்தம்இருக்கும்பக்கத்தை அன்னம் நெத்திக்குகாட்டி அழைத்தால்மனம்போல்வரும் கண்டவர்கள் மந்திரமென்றே நம்புவார்கள் லேசான மரத்தில் அன்னஞ்செய்யவும். 141

### ஒருவிதம்ஜலத்தை இரண்டுவிதமாக்குஞ் ஜாலம்.

கிண்ணத்தயில்லைநிறைசனையாயில் சலத்தைதனைத்து
நீலவர்ணமாக்கும்வித்தைதனிலைவாய்க்கேளு
சொந்தமாய் லிட்மஸ் கொஞ்சம்போட்டு
சொன்னபடிநீல்நிறமாகுமப்பா
வித்தையாய்சபையோர்கள் பார்த்தபின்பு
வேறுநிறமாக்குவேனென்றுசொல்லி
சொந்தத்திராகமதை கொஞ்சம்விட்டு
காட்டப்பாசெகப்புநிறமதச்சீனா

(வ-ம்) சபையில்நின்று பொகணிகொண்டுவரச்சொல்லிசலம்கொண்டுவரும்படிசெய்து இந்த சலத்தையிரண்டுவிதம் காட்டுகிறேனென்று சபையோருக்குதெரியாமல் லிட்மஸ் கொஞ்சம்போட்டால்சுகப்பென்று நீலநிரமாகும் அனைவர்களும்பார்த்தபின்புயிந்தநீலநிறத்தை செகப்பாகச்செய்கிறேன்பாவொன்று கொஞ்சம் கெந்தகதிராகத்தை தெரியாமல்விட்டுவிட்டால் செகப்புநிரமாகவிடும் கண்டவர்கள்பலே ஜோக்கென்று ஆச்சரியப்படுவார்கள், 142

நொண்டிச்சிந்து,

பீனுத்தம்காட்டும்ஜாலம்

பார்த்திநர்த்தும்ஜாலங்களெல்லாம்-ஆச்சரிக்க பகருவேன்ஜாலமொன்று மகிதலத்தில்-சூக்ஷமாய்பீனரிபட்டை-தனைசுருக்குடன்கொண்டுவந்துநருக்கிடுவீர் வஸ்திரகாயம்செய்து-அதை-வார்த்து ஜலத்தை விட்டு சேர்த்தியதாய் சேர்த்துவுருண்டைசெய்து-நல்ல-சிரிய சடலைப்பயரளவாக பார்த்துநீசெய்துவிடு-வெகு-பக்குவமாய்ஆடும்யிடம்சிக்கெனக்கொண்டு ஒருவர்க்கும்தெரியாமல் ஒரு வுருண்டைதனைக் கீழாகபோட்டுவிடு மண்டலமதிக்கவேதான் வுண்டையுடன்மண்ணையுமேகண்டுவாரிஎடுத்து சூழ்ந்திருக்கும்சபைதனிலே ஒருவர்கையில் சுருக்குடன்பூசிட பீநாருமே, (தந்தினதன)

(வ-ம்) பீனாரிப்பட்டையைக்கொண்டுவந்து வஸ்திரகாயம்செய்து அதில் ஜலம்விட்டு கடலைப்பருப்புபிரமாணம் வுண்டையாக செய்து வைத்துக்கொண்டு ஜாலம்காட்டுமிடத்தில் ஒருவருக்குந் தெரியாமல் வுருண்டையைக்கீழேபோட்டுவிட்டு அடையாளமாகப்பார்த்து மண்ணுடன்சேர்த்துவாரி ஜலம்விட்டுபூசினால் பீனுத்தம்நாறும் பார்த்தவர்கள் குட்டிச்சாத்தான் வேலையென்பார்கள். 143

நூலின்பெருமை.

பரிதிமதிமிகுதிநிறை ஜெகஜாலந்தான்
பாடதனையாராலே பகரப்போகும்
சுதியுள்ளஜெகஜாலந்தன்னைடப்பா
சூட்சமடாகண்டறியகடினமல்ல
அரியுருவேதிருவுருவேயாடவேணும்
அஷ்டதிக்கிலுள்ளவருங்காணவேணும்
குருவருளால்நானறிந்தபட்டுமிந்த
குணமானஜெகஜாலம்கூறினேனே,

விச்சித்திரவினோதஜெகஜாலக்கண்ணாடி

முற்றிற்று.